1970 மார்ச் 3]

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம்

*185 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை கேந்திரம் கட்டி முடித்தாகி விட்டதா ?

(இ) இல்லை எனில், காரணம் என்ன ?

(உ) எப்போது கட்டிமுடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 29-6-1965-ல் கட்டிடம் கட்டி முடிவுற்றது. 30-6-1965-ல் அது கால்நடை துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் உடன்குடி ஊராட்சி ஒன்றியம், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பண வசதி இல்லாத காரணத்தினால் இதுபோன்ற கட்டிடங்கள் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு, அங்குள்ள ஆசிரியர்களுக்கும் இப்போது சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது கமிஷன் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படிக் கமிஷன் அமைக்கப்பட்டு, அறிக்கை சமர்பிக்கப்பட்டுவிட்டதாக? உடனடியாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது திருச்செந்தூர் கால்நடை கேந்திரத்தைப்பற்றிய கேள்வி. திருச்செந்தூர் முருகனிடத்தில் செல்கிற பக்தர்கள் பல்வேறு கோரிக்கைகளை ஒரே சமயத்தில் எழுப்புவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் ஒன்றிலிருந்து ஒன்றாக பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிடுகிற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Strike by employees of Ramanathapuram Municipality

*186 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the employees of the Ramanathapuram Municipality had gone on strike about the 1st July, 1969; and

(*b*) if so, the details thereof

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 28-6-69 அன்று இராமநாதபுரம் நகராட்சி துப்புரவு [illegible]டுநர் (Sanitary Inspector) பணியில் இருந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணை நடத்துமாறு கோரி துப்புரவு பணியாளர்கள் உட்பட நகராட்சி ஊழியர்கள்